உ

தெண்டாயுதக் கடவுள்பேரில்

அமுர்தப்பத்து.

T. சாரதா புத்தகசாலை அதிபர்

T. S. துரைசாமி முதலியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

முராஹரி பிரெஸ், சென்னை.

உ

தண்டபாணி துணை.

தென்பழனிமலையி லெழுந்தருளிய

தெண்டாயுதக் கடவுள்பேரில்

அமுர்தப்பத்து.

சீராருந்தென்பழனி தேசிகனைச்சண்முகவேள்
பேராரும் பாமாலை பேசுதற்கிவ் - கோராரும்
நிம்பநிழற்குலவு நித்தனருட்போரங்
கம்பமதவாரணன்றாள் காப்பு.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

திங்களெனுமதி யொளிக்கதிக வொளியாமுன்திருக்க ரமிதியாதபாவி, தீயவஞ்சகரோடு உறவாகியே யுனது திருவடிமறந்தபாவி. கெங்கையெனும் வற்றாத பொய் கைசூழ்மலைசுற்றி போற்றியறியாதபாவி, கேவலமற்ற சுகம் மங்கையர்க்காளாகி வீணாள்கழித்தபாவி, அங்கமு

பூவெண்ணீ றணிந்தசிவஞானிகளை அனுவுமதியாத பாவி, ஐயையேமாபாவி, யென்போலு மொருபாவி, யாருமிலைகொடியபாவி, மங்கைமலைகுறவரிட தங்கை யுடன்மயிலேறி தெரிசனந்தருளுவாய், திங்களணி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி மலையமுர்தமே, 1

இகமதிலிரண்டுவினை யென்றசூழியறியாமல் இரவலரைவைதபாவி, யீயாதகொடுவஞ்சகுரவினால் நல்லறிவுயெள்ளளவிலாதபாவி, ஜெகமெனுக்கொடியவொரு பேய்பிடித்தேயுனது திருவடிமறந்தபாவி, தீயவஞ்சகமெனும் பொய்களவை நம்பியேதிரேகமெய் யென்றபாவி, மகமேரையொப்பிடா பேரின்பமோனத்தில் மனதுவையாதபாவி, மாபாவி யென்போலு மொருபாவி யகிலமதிலாருமிலைகொடியபாவி, திகைத்துனையடுத்த சிறுமதலையென்குறைதீர தீவிரம்வந்தருளுவாய், திங்களணிசங்ரன் மங்கையருள் செல்வமே தென்பழனிமலை யமுர்தமே. 2

பொய்யுடலைமெய்யென்று தீயருடனுற வாகிமெய்யறிவிலாதபாவி, பொய்பானமடமாத ரெனுமந்த பேயுடன் பொழுதினை கழித்தபாவி, கைபாரினின்கழல்பூசித்து பேரின்ப காட்சி காணுதபாவி கல்லாத புல்லரிடம் வல்லாண்மைபேசியே காலங்கழித்தபாவி, மெய்யானபேரி

பதிஷ்டையின தென்றதன் மேன்மையறியாதபாவின், மெல்லியர்க் கானான பாவியென் போலுமொருபர்விபி லைகொடியபாவி, தியனிவனென்று கைவிட்டிடாதேயடி மை தீவினையகற்றியாள்வாய், திங்களணிசங்கரன் மங் கையருள் செல்வமே தென்பழனிமலையமுர்தமே. 3

சர்க்கரைக் கற்கண்டு தேனுக்கு மினிதுசன்மார்க்க மறியாதபாவி, சன்மார்க்கமகிமையை யின்னதென்றறி யாமல் சர்ச்சனரைவைதபாவி, துன்மார்க்கநாவினு லெ ன்மனம்போனபடி தொல்லுலகுழன்றபாவி, துலையாதச ம்சார மலையெனும்பேயினல் தூரியனிலை மறந்த பாவி, துணையெனக்காருமிலை யாதரியென்றவரை துரத்திபேயடி த்தபாவி, யாருமிலைகொடியபாவி, தொல்லுலகில்மாபாவி யென்போலுமொருபாவி யாருமிலைகொடியபாவி, திக்கஷ் டகோணமொரு கொடியில் வலமாய்வந்த தெய்வமே யெனையாளுவாய், திங்களணிசங்கரன் மங்கையருள் செ ல்வமே தென்பழனி மலையமுர்தமே. 4

ஐயமென வந்தவர்க் கொருகாசு மீயாமல் அடித்து குலைசெய்தபாவி, அருப்புண்ட தென்னைகசுண்ணும் புதா வென்றவர்க் கனுவுமுதவாத பாவி, மையாடு விழிமா தர் கண்வலைபில்சிக்கியே மையலிலுழன்றபாவி, மதமெ ன்றே பேய்பிடித் தேயுடல மெய்யென்று மாதவமறந்த

பாவி, தெய்வகுஞ்சரிவள்ளி பாகனே நின்கழல் தியான மில்லாதபாவி, தீபாவிமாபாவி என்போலுமொருபாவி யாருமிலை கொடியபாவி, திவ்வியசாயுச்சியநிலை மேலான தெய்வமே, திருவடி யெனக்கருளுவாய், திங்களணிசங் கரன் மங்கையருள் செல்வமே தென் பழனி மலையமுர் தமே. 5

கைக்குள் வெண்ணெயை வைத்து நெய்யெடுக்கரியாத கசடர்களை யொத்தபாவி, கன்னெஞ்ச வஞ்சமே குடி கொண்டுசேருசார கவலையிலுழன்றபாவி, மையாடு தெய் வானை பாகனேநின்கழல் மனதிலுணராதபாவி, மாதருல் லாசவை போகத்தழுந்தியே மதிகெட்டலைந்தபாவி, மதி கெட்டுநின்கழல துதிவிட்டு உன்னடியர் மகிமையறியா தபாவி' மாபாவியென்போலு மொருபாவி யாருமிலை மண் ணுகில் கொடியபாவி, திக்கெலாம்போற்றுமொரு தெய் வமே உனையன்றி திக்குவேறில்லையாள்வாய், திங்க ணிசங்கரன் மங்கையருள செல்வமே தென்பழனி மலை யமுர்தமே. 6

பெரியோர்கள் போலபொய் வேடந்தரித்திந்த புவி தனி,லலைந்தபாவி, பேரின்ப நிஷ்டையில தென்றதனை பறியாமல் புலவரையிகழ்ந்தபாவி, வெறிகொண்ட கசட

ருட னுறவாகியே தினம் வீணாள்கழித்தபாவி, விண்ணு
லகறிந்தவர்கள் போலவே பொய்சொல்லி வீண்பொரு
ள்பறித்தபாவி, செறியெனும் நின்பூசை குறியொன்று
மறியாமல் நிலைகெட்டலைந்தபாவி, நீங்காதகன்னெஞ்ச
பாவியென்போலு மொரு பாவியிலைகொடியபாவி, திரிபு
ரமொத்தவர்க் கொருமொழியுரைத்தமா தெய்வமே யெ
னையாளுவாய், திங்களணிசங்கரன் மங்கையருள்செல்வ
மே தெண்பழனி மலையமுர்தமே, 7

மட்டிகளிலுங்கொட்டிய மட்டியுறவாகிமட மாதர்து
தானபாவி, மதிகெட்டுநெறிவிட்டு நமனுக்குமிவ்வுடலைவ
ளமாய் வளர்த்தபாவி, சற்குருநின்புகழ் கசடருடனுற
வாகி சர்ச்சனரைவைதபாவி. சண்டாளருக்குமா சண்
டாளனுங் கொடிய சண்டாளனானபாவி, எடடெனிரண்
டுசேர்த் தாலெண்ணவறியாமலிகமதிலுழன்றபாவி என்
போலுமொருபாவி யாருமிலைமாபாவி இவ்வுலகில் கொ
டியபாவி, திட்டெனும் சமுசாரகடலிலலையாமலென் தீ
வினையகற்றியாள்வாய் திங்களணிசங்கரன் மங்கையருள்
செல்வமேதென்பழனிமலையமுர்தமே. 8

சரவணற்பவகுக சாண்ணின் ருளென்று சாற்றவறி
யாதபாவி சற்சனருடன் கூடிபொருதரம்சண்முகாவென்

ருமரியாதபாவி பரமானசாயுச்ய பதவிநிலைமேன்மையில் பட்சம்வைபாதபாவி பரமனுக்கு குறைசொன்னதெய்வமே நின்தொண்டர் கூட்டமரியாத பாவி திரமாகவெண்ணீ றணிந்தனின் தெரிசனம்செய்து மறியாதபாவி,தீவினைச்செய்தமாபாவியென் போலுமொருபாவியிலைகொயபாவி சிரமதுவலைத்தநின்னடிமையென்றேனெனதுசிறுகவலை மாற்றியருள்வாய், திங்களணிசங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனிமலையமுர்தமே. 9

நின்கோயிம்வலமாக வந்துநின்னடிபோற்ற நினைவனுவிலாதபாவி, நிலையிலாமனதையோர்நிலை கொண்டுனைத்தொழுவர்நேசமில்லாதபாவி இன்னில் மதிக்கவொருநல்வினைசெய்யாமலே என்னுடல் வளர்த்தபாவி இவ்வுடல்பிரிந்தாவி போகுமிதுநிலையல்ல வென்றுனை தொழாதபாவி,யென்வறுமை தீர்த்தாள்வதுகடமை யென்றடிமைவினவினேன்பதிகமாக ஏனோபராமுகம் காணோஉனக்கேதிர் எனையாள்வதொரு பாரமோ, தென்பழனி தெய்வமே நின்னடிமையென்றபின் திகைத்தவர்களொருவருண்டோ, திங்களணிசங்கரன்மங்கைபருள் செல்வமே தெபழனிமலையமுர்தமே. 10

வேறு.

சிவசிவபசரஹண பவாவாயுசர்ம்பிராச்சிபதிருவாணி
தேவிவசிய, செகம்தசியஓம்நமோ நாராயணாவசி ஸ்ரீரா
மஜெயம்வசியவா, எவருமெனதுளம் வசியவாலை திரிபு
ரையுவளை என்னிதயமாகிவசிய, எனதுமனம்வசியஜெக
ராஜாராஜேந்திரு செய்போதுமென்னுள்வசிய அவமிரு
க்கதுவசிய பூதப்பசாசகரர் ஆங்கார அரவுவசிய ஆகா
தசத்துருவு வென்னடிக்கீழ்வசிய வருள்தந்துபெணையா
ணாவாய், .தவம்வசியமேன்மைதரும்வள்ளிமணவாளனே
சுவாமிநானை நம்பினேன், சதுர்மறைக ளடிமுடியு நடு
மயமு நிறைகின்ற சண்முகசிவாநந்தமே. 11

தெண்டாயுதக் கடவுள்பேரில்

அமுர்தப்பத்து

முற்றிற்று,